தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 14, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 ஜூலை 29, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த்தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 61, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.*

61—

மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடலுணவுத் தொழிற்சாலை

***15154—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர் அல்லது குறுக்குச் சாலையில் மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர் குறுக்குச் சாலையில் மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி மிகவும் வறட்சியான பகுதி. இங்குள்ள மக்கள் விவசாயம் மற்றும் ஆடு, மாடு வளர்க்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள். தற்சமயம் பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினால் இந்தத் தொழில்களும் சிறப்பான முறையில் நடைபெறுவதில்லை. குறுக்குச் சாலை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இங்கு குறைந்த கூலியில் வேலை ஆட்களும், குறைந்த விலையில் இடவசதிகளும் கிடைப்பதற்கு வாய்ப்பாக உள்ளது. மேலும், வெள்ளப்பட்டி என்ற பகுதியிலே தமிழ்நாட்டிலே நண்டு வளர்ப்புத் தொழில் மாண்புமிகு அம்மா அவர்களால் சென்ற ஆண்டு துவக்க அனுமதிக்கப்பட்டு அது சிறப்பாக நடைபெற்று வருகிறது. வெள்ளப்பட்டி, தருவைக்குளம், தூத்துக்குடி ஆகிய பகுதிகளிலே மீன் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகையினால் இந்தப் பகுதிகளிலே மீன் பதப்படுத்தும் தொழிலை அல்லது கடல் உணவு தயாரிக்கும் தொழிலைச் சிறப்பாக நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மற்றும் ஓட்டப்பிடாரம், புதியம்பத்தூர் அல்லது குறுக்குச் சாலையில் தனியாரால் குளிர்பதன நிலையங்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், அரசால் வணிக நோக்கத்தில் மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடல் உணவு தயாரிக்கும் நிலையம் துவங்கி நடத்துவது இலாபகரமாக அமையும்

2004 ஜூலை 29]

சாத்தியம் இல்லை என்பதால் அவ்வாறான திட்டங்கள் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பட்டணமருதூர், புதூர்பாண்டியாபுரம் ஆகிய இடங்களில் மீன் பதப்படுத்தும் தொழில் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு தரமான மீன்களைப் பதப்படுத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இதன்மூலமாக இங்கு அதிகமான இலாபம் கிடைக்கிறது என்று அந்தத் தொழிலதிபர்கள் கூறுகிறார்கள். எங்கள் பகுதிகளில் இந்தத் தொழிற்சாலை வரும் காலகட்டத்தில் இங்கு அதிகமான இலாபம் அரசுக்குக் கிடைக்க வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை உணர்கிறோம். மேலும், இந்தப் பகுதியில் இந்தத் தொழிற்சாலை வரும் காலகட்டத்தில் எங்கள் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்; அரசுக்கு அதிகமான இலாபமும் கிடைக்கும். ஆகையினால் இதை இந்த ஆண்டு இல்லையென்றாலும் வரும் நிதியாண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசால் இந்த மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். இன்றைக்கு உள்ள சூழ்நிலையிலே தனியார் செய்வதைவிட அரசால் நடத்தப்படும் இந்தத் தொழிலில் செலவு நடைகளும் அதிகமாகும் என்பது எல்லோருக்கும் கண்கூடாகத் தெரிந்த உண்மை. அந்த அடிப்படையிலே இதுபோன்ற மீன் பதப்படுத்தும் நிலையம் அரசால் அமைக்கின்ற சாத்தியம் இல்லையென்றாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று இதனை அமைப்பதற்கான முடிவுகள்பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையின் மூலமாகப் பல சிறிய துறைமுகங்களும், பெரிய துறைமுகங்களும் கட்டுப்பாட்டில் உள்ளன. குறிப்பாக, தமிழகத்திலுள்ள அனைத்து.சிறிய துறைமுகங்களிலும் மீன் பதப்படுத்தும் நிலைய்த்தை ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2004 ஜூலை 29

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசால் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட குளிர்பதன நிலையங்களிலெல்லாம் நஷ்டம் ஏற்படுகின்ற சூழ்நிலையிலே இன்றைக்குத் தனியாருக்கு அவற்றையெல்லாம் ஒப்பந்தத்திற்காக அதாவது lease–க்கு, வாடகைக்கு விடப்பட்டிருக்கின்ற சூழ்நிலையிலே அரசால் இதுபோன்ற கம்பெனிகள் அமைக்கின்ற திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று இதுசம்பந்தமாக அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி எஸ். ராஜம்மாள்.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தூத்துக்குடி மாவட்டமானது கடல் பகுதி நிறைந்த இடம். அதிலே கடல்வளத் தொழில் செய்பவர்கள்தான் 30 சதவீதம் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது நலிந்த நிலையில் இருக்கிறார்கள். தனியார் அதை நடத்துவதால் இவர்களுக்கு அதிகமான இலாபம் கிடைப்பதில்லை. தனியார்களே அந்த இலாபத்தைக் கொண்டு போகிறார்கள். அதை அரசு நடத்தினால் ஏழையெளிய மீனவ சமுதாய மக்களுக்கு நாம் நன்மை செய்தது போலவும் இருக்கும்; நல்ல முறையிலே அதை முறைப்படுத்தி நடத்தினோமானால் இலாபகரமான தொழிலாக அமைந்து அரசுக்கு வருவாயும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, அதற்கு ஆவன செய்வார்களா என்று அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு; சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னர் கேட்ட கேள்விகளுக்குக் கூறிய பதில் இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 62, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.